Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 77/2023**

**Deposition of PW.6 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவமுத்து | ஜாதி | : | |
| த/பெ | : | சக்திவேல் | தொழில் | : | பொறியாளர் |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் குரும்பபட்டியில் குடியிருந்துகொண்டு பொறியாளராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 பொன்ராஜை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 14.09.2022 அன்று மாலை 04.00 மணியளவில் எங்கள் ஊரைச் சேர்நத் ராமன் என்பவர் பிரேத்தை பொன்ராஜ் தோட்டத்து வழியாக எடுத்து சென்றோம் என்றும், அப்போது அங்கு வந்த பொன்ராஜ் அ.சா.1 ஐ பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி, அடித்து காயப்படுத்தினார் என்றும், நான் சம்பவத்தை பார்த்து விலக்கிவிட்டேன் என்றும், அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டார் என்று போலிசார்

விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 77/2023**

**Deposition of PW.7 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவா | ஜாதி | : | |
| த/பெ | : | திருமூர்த்தி | தொழில் | : | ஓட்டுநர் |
| கிராமம் | : | குரும்பபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 29/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் குரும்பபட்டியில் குடியிருந்துகொண்டு Eicher நான்கு சக்கர வாகன ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் 2வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.2/PW.7)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் சேர்ந்து யார் கையெழுத்து செய்தார்கள் என்று தெரியாது. மேற்படி கையெழுத்தை நான்கு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் கருப்புசாமி கோவில் அருகே வைத்து, கன்னிவாடி காவல்நிலையத்தில் இருந்து வந்த போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்து போட்டேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னிடம் விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்து போட்டேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நீங்கள் உங்கள் ஊரில் இல்லை என்றால் சரிதான். ஒரு வாரம் கழித்து தான் உங்கள் ஊரில் வைத்து நீங்கள் கையெழுத்து செய்து கொடுத்தீர்கள் என்றால் சரிதான்.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor